1984 மார்ச் 12]

முன்னாள் இராணுவத்தினருக்கு வங்கிகளில் வேலைக்காகப் பயிற்சி அளிக்கும் திட்டம்.

267—(*வினா எண். 20708) திரு. சி. கணேசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன்னாள் ராணுவத்தினருக்கு பாங்க் வேலைக்காக பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்த பயிற்சி முகாம்கள் எப்போது செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) முன்னாள் இராணுவத்தினருக்கு வங்கிகளில் வேலைக்காகப் பயிற்சி அளிக்கும் திட்டம் தமிழ் நாட்டில் செயல் படுத்த மத்திய அரசு இசைவளித்து, 1983 ஆம் ஆண்டில், மூன்றாம் வகுப்புப் பணிகளுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. 1984 ஆம் ஆண்டிலும் இப்பயிற்சித் திட்டத்தினைச் செயல்படுத்துவது குறித்த செயற்குறிப்பு மத்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) வங்கிப் பணித் தேர்வுக் குழுவினரால் மூன்றாம் வகுப்புப் பணிகளுக்குக் காலியிடங்கள் குறித்து செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்படுவதைப் பொறுத்துப் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி பயிற்சி கொடுக்கப்பட்டவர்களில் எத்தனை பேர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்? இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு உரிய வழிவகைகள் ஏதாவது இருக்கின்றதா? இதில் அரசின் கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பயிற்சி பெற்றவர்களிலே எவ்வளவு பேர்கள் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்ற விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால் மத்திய அரசினால் தேர்வு செய்யப்பட்டு, பல்வேறு தொழில் பிரிவுகளில், வங்கி முன்தேர்வு பயிற்சி வகுப்புகள், வங்கிப் பணிகளில் முன்னாள் படை வீரர்கள் தேர்வு பெற உறுதுணையாக அமையும் என்ற கருத்தை வங்கிப் பணிகளிலே மூன்றாம் வகுப்புப் பணிகளுக்கு, தேர்வு விண்ணப்பத்திலேயிருந்து, 60 முன்னாள் படை வீரர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்பதற்காக, தமிழக அரசை மத்திய அரசு தேர்ந்தெடுத்து தமிழகத்திலே அந்தப் பயிற்சியைத் தரலாம் என்று அவர்கள் சொன்னார்கள். தமிழக அரசும் அதை ஏற்றுக்கொண்டு அந்தப் பயிற்சிக்கு ஒப்புதல் அளித்தது. 1 மாதகாலத்திற்கு, வேலூர் திருச்சி போன்ற 2 மையங்களில் அந்தப் பயிற்சி வகுப்புகள்

நடத்தப்பட்டன. அவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 300-ம் வழங்கப்பட்டது. ஆக, இதிலே நல்லதொரு நிலைமை வரும் என்று அடுத்த ஆண்டும் இந்த முறையை நடைமுறைப் படுத்தலாம் என்றும், அதன் மூலமாக ஓரளவிற்கு முன்னாள் படை வீரர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடும் என்ற காரணத்தால் நாம் இந்தத் திட்டத்தை செயல்படுத்த முடியும் என்றும், அதற்கான விளம்பரங்கள் வருகின்றபோது நாம் மேற் கொண்டு 150 பேர்களுக்கு மொத்தத்திலே முன்னாள் ராணுவத் தினருக்கு இந்தப் பயிற்சி அளிக்கலாம் என்றும், அதற்காக 4, 5 மையங்களைத் தேர்ந்தெடுக்கலாம் என்றும் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். மத்திய அரசினுடைய பதிலை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாநில கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கி ஆகியவை களிலே பணியாளர்களைத் தேர்வு செய்யும்போது முன்னாள் ராணுவத்தினருக்கு ஏதேனும் ஒதுக்கீடு செய்யப்படுகிறதா? அப்படியானால் எத்தனை சதவீதம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான பர்சன்டேஜ் என்ற அளவில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. முன்னாள் ராணுவத்தினர் கழகத்தின் சார்பாகவும், அரசின் சார்பாகவும், தனியார் துறைகளிலேயும் சரி, பொதுத்துறைகளிலேயும் சரி, அவற்றிலே அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்ற அளவிற்கு ஒரு தாக்கீது அனுப்பப்பட்டு இருக்கிறது. அதற்குத் தகுதி படைத்தவர்கள், திறமை படைத்தவர்கள் என்று வருகின்றபோது, முன்னாள் ராணுவத்தினராக இருந்தால், அவர்களுக்கு முன்னுரிமை அளித்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வங்கிகளிலே பயிற்சி அளிக்கின்ற திட்டத்திற்கு எவ்வளவு காலத்திற்கு முன்பாக ஓய்வு பெற்ற ராணுவத்தினரை அந்தப் பயிற்சிக்கு அழைக்கிறார்கள்? அதே சமயத்தில் படித் திருந்தவர்களையும் அந்தப் பயிற்சிக்கு அழைக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. கூடுமான வரையில் அதற்கேற்ற அளவிற்கு படிப்புத் தகுதிகள் இருக்க வேண்டும். வங்கிகளிலே வேலை பார்க்கின்ற மூன்றாம் தரத்தின ருக்கான பணிகளுக்காக பயிற்சி பெறுவதும், நான்காம் தரத்தின ருக்கான பணிகளுக்காகப் பயிற்சி பெறுவதற்கான அளவிலே அவைகள் இருக்கின்றபோது, அந்தப்பணிகளுக்காக என்ன கல்வித்

1984 மார்ச் 12]

தகுதிகள் வகுக்கப்பட்டு இருக்கிறதோ, அந்தத் தகுதி பெற்றவர்கள் எல்லாம் அதிலே ஈடுபடலாம் என்ற வகையில்தான் இருக்கிறது. வயது பற்றிய குறிப்பீடுகள் இல்லை. ஆகவே அநேக ராணுவத்தினர் 35, 40 வயதிற்குள்ளே ஓய்வு பெற்று விடுகிறார்கள். அப்படியானால் இதிலே சேருவதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன.

ஆறாவது திட்டத்தின்கீழ் மாநில அரசுக்கு மத்திய அரசு வழங்கும் நிதி.

268—(*வினா எண். 20819)—திரு. பெ. சு. திருவேங்கடம்; மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண வீக்கத்தினால் ஆறாவது திட்டத்திற்குரிய நிதி வசதிகள் பாதிக்கப்பட்டுள்ளதால். இதைப் போக்க மாநில அரசுக்கு மத்திய அரசு நிதியை உயர்த்தித் தருகிறதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

(இ) தமிழ் நாடு பெறும் நிதி உதவி எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

(இ) எழவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணவீக்கத்தினால் ஆறாவது திட்டத்திற்குரிய நிதி வசதிகள் பாதிக்கப்பட்டு உள்ளதால், மாநில அரசினுடைய பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செம்மையாக நடைபெறுவதற்கு மத்திய அரசு தடையாக இருப்பதாக இந்த அவையிலே பல நேரங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். அதனால் இப்போது நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் டெல்லி சென்றபோது மாநில அரசாங்கம் கோரிய அந்த நிதி ஒதுக்கீட்டினுடைய அனுமதி மத்திய அரசால் வழங்கப்பட்டு உள்ளதா என்பதை நா அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்வதைப் பொறுத்த வரையில் 1980-81 முதல் 1984-85ம் வரையில் உள்ள காலம் ஐந்தாண்டு முடிவடையும் காலமாகும்